முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சிறப்புலி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

11.12.2018, செவ்வாய்க்கிழமை

1. **ஞானயோகியே அரங்கா போற்றி**
**ஞானிகளின் மகா சக்தியாக வந்த**
**தானதரும பலம் கொண்ட தவசியே**
**தவராசனே உன் பெருமை கூறியே**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி தேளின் திங்கள்**
**தெரியவே இருபானை திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 25ம் நாள் 11.12.2018, செவ்வாய்க்கிழமை)**
**தேசிகனுக்கு சிறப்புலி நாயனார் யானும்**
3. யானும் உலகோர் நலமுற உரைப்பேன்
உயர் வாசி வென்ற அரங்கன்
ஞானவழி ஏற்று வரும் மக்களும்
ஞானபண்டிதன் அருளாசி அடைவதுடன்
4. அடைவதுடன் அழியாமை எனும்
ஆனந்த பெருநிலை அடைவர்
தடையற அரங்க ஞானியின்
தருமத்தை ஏற்று வரும் மக்கள்
5. மக்களெல்லாம் பொருளுதவி செய்வதுடன்
மகா தொண்டில் கலந்து வருக
தேக்கமிலா சகல காரிய வெற்றியும்
தெளிவும் திடமும் முழுமைபட அடைவர்
6. அடையவே பேருலகில் எங்கும் கிட்டா
ஆன்மீக எளிய ஞான தருமவழியை
சோடை போகா வண்ணம் வழங்கி வரும்
சுத்தநெறியாம் அரங்க ஞானி உயர் நெறி
7. நெறி வழி உலக மக்களெல்லாம்
நெறி பிறழா தொடர்ந்து வருக
அறியாமை விலக்கி ஆன்ம பலம்தரும்
ஆறுமுகனாரை உலகோர் அடைதல் நேரும்
8. அடைதலுடன் கலி இடர் வெல்லும்
ஆற்றல் பலமும் ஆயுள் கீர்த்தியும்
தடையற ஞானயுக வாழ்வுக்கு
தகுதியும் தேர்வும் பெறுவர்
9. பெருமைமிக்க அரங்க ஞானியின்
பெருமை தரும் தொண்டர்கள் வழியே
வறுமை உலக சீர்கேடுகளெல்லாம்
வடிவேலன் சக்தியால் மாறவிருக்க
10. இருக்கவே அருள் சீடர் மக்களே
எங்கும் தேடி அலைந்து சிறப்பிலா
வருத்த நிலை கொண்ட மக்களே
வணங்கி துறையூர் மண்ணில் வாழும்

11. வாழும் அரங்கமகா ஞானியரை
வழிமொழிந்து பணிந்து ஏற்று வர
வாழும் காலமே சகலத் தெளிவுடன்
வரங்களாக பெற்று பிறவா பேறடைவீர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் சிறப்புலி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஞானயோகங்கள் அநேகம் அநேகம் செய்து வெற்றி கண்டிட்ட ஆறுமுக அரங்கா போற்றி, உலகினில் உள்ள ஞானிகளின் மகா சக்தியாக வந்துதித்திட்ட தானதரும பலம்மிக்க மகா தவசியே அரங்கா அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 25ம் நாள் 11.12.2018, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே சிறப்புலி நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சிறப்புலி நாயனார்.

வாசியை வென்றிட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனார் வகுத்திட்ட கடைத்தேற்றவல்ல ஞானவழிகளை ஏற்றுக் கொண்டு அவற்றை கடைப்பிடிக்கின்ற மக்களெல்லாம் ஞானபண்டிதன் முருகப்பெருமானின் அருளாசிகளைப் பெறுவதுடன் அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வினை அடைந்து சிறப்படைவார்கள். அரங்கமகா தேசிகனாரின் தானதருமப் பணிகளை அவரவரும் தமது கடமையாக ஏற்று செய்வதுடன் பொருளுதவிகள் செய்தும், தொண்டுகள் செய்தும் வரவர, அவர்கள் எடுத்த செயல்கள் அனைத்தும் தடையின்றி வெற்றியடைவதுடன் தெளிவும் மனோதிடமும் முழுமையாக பெற்று சிறப்பான வாழ்வினை வாழ்வார்கள்.

இந்த உலகினில் எங்கும் கிட்டாத எவரிடமும் இல்லாத ஆன்மீக எளிய ஞான தருமவழிதனை வீண் போகாதவாறு உலக மக்களுக்கு வழங்கி அதை மக்கள் கடைப்பிடிக்க செய்து ஜென்மத்தைக் கடைத்தேற்றுமாறு உடன் காக்கும் ஆறுமுக அரங்கனின் சுத்தநெறியாம் உயர் ஞானநெறியை உலக மக்களெல்லாம் பின்பற்றி வரவர, அறியாமையை விலக்கி ஆன்மபலம் தந்தருளும் முருகப்பெருமானாரை உலக மக்களும் அடைந்திடும் வாய்ப்பினை பெறுவார்கள். கலியுகத்தினை வெல்லும் ஆற்றலும் பலமும் பெற்று நீடிய ஆயுளையும் புகழையும் அடைந்து தடைகள் ஏதும் இன்றி ஞானயுக வாழ்விற்கு தகுதியும் தேர்வும் பெற்றிடுவார்கள்.

பெருமைமிக்க அரங்கமகா தேசிகனாரின் பெருமைமிக்க தொண்டர்களின் மூலமாக உலகினில் உள்ள வறுமை நீங்கிடும், உலகின் சீர்கேடுகள் எல்லாம் முருகப்பெருமான் தயவினால் மாற இருக்கின்றதப்பா. ஆதலினால் அருள் சீடர் மக்களே, உலகினில் எங்கும் தேடி அலைந்து முடிவு காண முடியாமல் சிறப்புகள் இல்லாமல் வருத்தமுற்று உள்ள மக்களே நீங்களெல்லாம் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு பயபக்தி பணிவுடன் வருகை தந்து துறையூர் மண்ணில் வாழும் அரங்கமகா தேசிக ஞானயோகியரை வணங்கி ஆசி பெற அவர்கள் வாழும் காலத்திலேயே சகலவிதமான தெளிவுகளையும் வரங்களையும் பெற்று பிறவா பெரும்பேற்றை அடைந்து சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சிறப்புலி நாயனார்.

–சுபம்–